KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 28.12.12

| Date of Council meeting | Decision Number | Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| 31.12.12 | 423 | **பொருள் எண்:-1**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் கோழி இறைச்சி கடைகளில் ஏற்படுகின்ற கழிவுகளை வரை முறைப்படுத்தி கண்ட இடங்களில் போடாமல் நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொண்ட 18-வது வார்டு உறுப்பினர் திரு.இ.எம்.சாமி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பிரத்யேக கைவண்டிகள் மூலம் கிழிவுகளை சேரித்து குப்பைகளை கொட்டுவதற்கு தேர்வு செய்யப்பட்ட நகராட்சிக்கு சொந்மான இடததில் உடனுக்குடன் குழிதோண்டி புதைத்திட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. |
| | 424 | **பொருள் எண்:-2**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதி எல்லைகுள் பிளாட் போடுவது அதிகரித்து வரும் நிலையில் ஒரு பிளாட் நகர்மன்றத்திற்கு ஒதுக்கு ரியல் எஸ்டேட் நடத்துபவர்களிடம் பெற நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொண்ட 18-வது வார்டு உறுப்பினர் திரு.இ.எம்.சாமி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | நகரில் நில விற்பரன செய்யும் உரிமையாளர்களை அழைத்து (குடிநீர் தொட்டி, பூங்கா, சாலை, டிராண்ஸ்பார்மர் பேன்ற வசதிகளுக்கு) நகராட்சிக்கு நில ஒதுக்கீடு செய்வது குறித்து பேச்சு வார்த்தை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 425 | **பொருள் எண்:-3**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதி 1-வது வார்டு கடையக்குடி மாதா கோவில் வடபுறத்தில் உள்ள குடியிருப்பு பகுதியில் உள்ள மின் கம்பங்களில் புதிதாக 3 மின்கம்பங்களில் தெரு விளக்குகள் பொருத்த கேட்டுக் கொண்ட 1-வது வார்டு உறுப்பினர் திரு.எ.லுக்மான் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்திட மன்றம் தீர்மானித்தது. |
| | 426 | **பொருள் எண்:-4**<br>காயல்பட்டணம் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள **DCW** தொழிற்சாலையினார் சுற்றுசூழலுககு மாசு ஏற்படுகிறது என்றும் னுஊறு நிறுவனம் அனைத்து வரிகளையும் நம் காயல்பட்டணம் நகராட்சிக்கு முறையாக செலுத்தப்படவில்லை என்றும் வரும் குற்றச்சாட்டுகள் குறித்து மன்றத்தில் விவாதித்து முடிவு செய்ய கேட்டுக் கொண்ட 13-வது வார்டு உறுப்பினர் திரு.எம்.எஸ்.சம்சுதீன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.<br><br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் தீர்மானித்து முடிவு செய்யலாம்.<br><br>**நகர்மன்ற தலைவர் குறிப்பு:-**<br>DCW நிறுவனம் குறித்து எழுப்பப்படும் சந்தேகங்கள் குறித்து எழுத்து பூர்வமாக அந்நிறுவனத்திற்கு அனுப்பி இரு வாரங்களுக்குள் அதற்கான பதிலை அந்நிறுவனம் நகராட்சிக்கு வழங்க வேண்டும் பெறப்பட்ட பதிலின் அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கைகளை நகராட்சி மேற்கொள்ள வேண்டும் | DCW தொழிற்சாலையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஒவ்வொரு மாதமும் மேற்கொள்ளும் பரிசோதனை முடுடிவுகளை நகராட்சிக்கு வழங்கிடும்படி தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தை கேட்டுக் கொள்வது என மன்றம் தீர்மானிக்கிறது.<br>DCW நிறுவனத்தின் தெற்கில் அமைந்துள்ள நீரோடையில் ஏற்பட்டுள்ள மாசு குறித்து துறை சார்ந்த வல்லுனர்களை கொண்டு ஆய்வுகள் மேற்கொள்ள தமிழக அரசினை கேட்டுக்கொள்ள இம்மன்றம் தீர்மானிக்கிறது<br>DCW நிறுவனம் செலுத்தும் தொழில்வரி |

| | | | |
|---|---|---|---|
| | | | காலிமனைவரி சொத்துவரி மற்றும் அனைத்து வரிகளை குறித்தும் முறையாக ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கிறது |
| | 427 | **பொருள் எண்:-5**<br>காயல்பட்டணம் நகராட்சியில் ரோஜா ஆண்கள் சுயஉதவிக்குழுவின் கீழ் பணிபுரியும் 9 நபர்களுக்கும், கணிணி இயக்குபவர் ஆ.ளு.நசீர் கான் என்பவருக்கும் மற்றும் வாகன ஓட்டுநர்கள் மு.அஸ்கர் மற்றும் பு.செல்வகுமார் ஆகியோரின் ஒப்பந்த காலம் டிசம்பர்-2012 உடன் முடிவடைவதை முன்னிட்டு அன்னார்களின் ஒப்பந்த பணி காலத்தை ஓராண்டிற்கு (ஜனவரி 2013 முதல் டிசம்பர் 2013 முடிய) மன்றத்தின் அனுமதி பெற்று ஊதியம் மற்றும் பணி வழங்கிட கேட்டுக் கொண்ட 10-வது வார்டு உறுப்பினர் திரு.எஸ்.எம்.பி.பதுருல் ஹக் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**நகர்மன்ற தலைவர் குறிப்பு:-**<br>ஒப்பந்த பணியாளர்களுக்கு அவர்களது பணி நாட்களை 89 நாட்களுக்கு கூடுதலாக வழங்க கூடாது என்பது பொதுவாக அரசு தரப்பில் கடைபிடிக்க படும் வழிமுறை. மேலும் அவர்களது பணி நீட்டிப்பானது அவர்களின் வருகை அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பணிகளில் அவர்களின் செயல் பாடு அவர்களின் மீதுள்ள புகார்கள் அடிப்படையில் தான் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். | மேற்கண்ட பணியாளர்களின் ஒப்பந்தத்தை மேலும் 89 நாட்கள் மட்டும் நீட்டிட மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 428 | **பொருள் எண்:-6**<br>காயல்பட்டணம் நகராட்சியில் ரோஜா ஆண்கள் சுயஉதவிக்குழுவின் கீழ் பணிபுரியும் ஒப்பந்த பணியாளர்களின் ஒப்பந்தம் 31.12.2012 உடன் முடிவடைவதால் அவர்களுக்கு பணி நீட்டிப்பு வழங்குவது குறித்தும் அவர்களது பணி திருப்தி இல்லாது குற்றச்சாட்டுகள் வரும் பட்சத்தில் அவர்களை பணி நீக்கம் | நிரந்தர மற்றும் ஒப்பந்த பணியாளர்களின் பணியில் திருப்தி இல்லாது குறித்து பெறப்படும் ஆதாரபூர்வமான |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யவும் கேட்டுக் கொண்ட நகர்மன்ற தலைவர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் தீர்மானித்து முடிவு செய்யலாம்.<br><br>**நகர்மன்ற தலைவர் குறிப்பு:-**<br>ஒப்பந்த பணியாளர்களுக்கு அவர்களது பணி நாட்களை 89 நாட்களுக்கு கூடுதலாக வழங்க கூடாது என்பது பொதுவாக அரசு தரப்பில் கடைபிடிக்க படும் வழிமுறை. மேலும் அவர்களது பணி நீட்டிப்பானது அவர்களின் வருகை அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பணிகளில் அவர்களின் செயல் பாடு அவர்களின் மீதுள்ள புகார்கள் அடிப்படையில் தான் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். | புகார்களின் அடிப்படையில் நிரந்தர மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுத்திட மன்றம் தீர்மானிக்கிறது |
| | 429 | **பொருள் எண்:-7**<br>காயல்பட்டணம் நகராட்சி வுே 69 ரு 6922 பொது சுகாதார வாகனத்தை பழுது பார்க்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,000/-த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**நகர்மன்ற தலைவர் குறிப்பு:-**<br>வாகனத்தில் என்னென்ன பழுதுகள் பார்க்கப்பட இருக்கிறது என்பது குறித்த விளக்கமும்(எழுத்தில்) விலைபுள்ளியும் மன்றத்தில் சமர்ப்பிக்கபட வேண்டும். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 430 | **பொருள் எண்:-8**<br>காயல்பட்டணம் நகராட்சி நவம்பர் - 2012 மாத செலவினங்கள் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.<br>**அலுவலக குறிப்பு:-**<br>செலவினங்களை மன்றம் அங்கீகரிக்கலாம். | செலவுச்சீட்டுகள் குறித்த விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின் நவம்பர் 2012 செலவினை மன்றம் அங்கீகரித்து முடிவு செய்தது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>நகர்மன்ற தலைவர் குறிப்பு:-<br>கடந்த நவம்பர் 2011 முதல் செப்டம்பர் 2012 வரையிலான நகராட்சி கணக்குகள் இதுவரை சமர்ப்பிக்க படவில்லை இதற்கு காரணமான அலுவலர்கள் மீது ஆணையர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>431</td>
<td>பொருள் எண்:-9<br>காயல்பட்டணம் நகராட்சி விசாலாட்சிஅம்மன் கோயில் தெரு முதல் இரத்தினாபுரி வரை செல்லும் (வழி:-பப்பரப்பள்ளி) சாலையில் (நீளம்: 1.200 கி.மீட்டர்) பப்பரப்பள்ளி என்ற இடத்தில் துணை மின் நிலையம் அமைத்துக் கொள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி இடத்திற்கு செல்லும் தற்போதைய தார்சாலையானது மிகவும் குறுகலாகவும் (3.30அ அகலம்) சேதமடைந்து உள்ளது. அச்சாலையை அகலப்படுத்தவும் (இருபுறமும் சுமார் 1.20அ) மேம்படுத்தவும் நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.22.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.</td>
<td>மன்றம் அனுமதி வழங்குகிறது</td>
</tr>
<tr>
<td></td>
<td>432</td>
<td>பொருள் எண்:-10<br>காயல்பட்டணம் நகராட்சியில் திறந்த வெளியில் மனிதக்கழிவு கழிக்கும் நிலை அகற்றுதல் 2011-12 ன் கீழ் கீழ்க்கண்ட இரண்டு பணிகள் தேர்வு செய்யப்பட்டு 12 வது அழைப்பாக 13.12.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (இலட்சத்தில்)</th><th>ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி</th><th>ஒப்பந்த வகை</th></tr>
<tr><td>1</td><td>மங்களவாடியில் புதிய பொது கழிப்பிடம் கட்டுதல்</td><td>7.20</td><td>திரு.ஆர்.தலவாணிமுத்து, 33,பூந்தோட்டம், காயல்பட்டணம்</td><td>மதிப்பீடு ரேட்டிற்கு 4.95மூ கூடுதல்</td></tr>
</table>
</td>
<td>வ.எண். 1 ல் உள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கிறது.<br><br>வ.எண் 2-ல் தேவைபடும் பொருத்தமான இடம் பெறப்பட்டபிறகு புதிதாக பொதுகழிப்பிடம் நகராட்சியின் பொது நிதியிலிருந்து அமைத்திட மன்றம் அனுமதி வழங்குகிறது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr>
<td>2</td>
<td>கீழ லட்சுமி புரத்தில் உள்ள பொது கழிப்பிடத்தை மேம்பாடு செய்தல்</td>
<td>2.00</td>
<td>திரு.ஆர்.தலவாணிமுத்து, 33,பூந்தோட்டம், காயல்பட்டணம்</td>
<td>மதிப்பீடு ரேட்டிற்கு 4.95மூ கூடுதல்</td>
</tr>
</table>
மேற்கண்ட பணிகள் அரசின் திட்டப்பணியாக இருப்பதாலும், 12வது ஒப்பந்தப்புள்ளி அழைப்பாக இருப்பதாலும், பணிக்கு ஒற்றை ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதாலும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதி வழங்கலாம்
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>433</td>
<td>
பொருள் எண்:-11
காயல்பட்டணம் நகராட்சி நகர்மன்ற கூட்டங்களில் பத்திரிகையாளர்களை அனுமதிக்க வேண்டி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு/
அலுவலக குறிப்பு:-
அரசு அனுமதி பெற்ற பத்திரிகைகள் நகர்மன்ற கூட்டம் நடைபெறும் பொழுது பார்வையிட்டு கூட்டம் முடிவு பெற்றபின்பு பத்திரிகை செய்திகளை சேகரிக்க மன்றத்தின் அனுமதிக்காக ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்ட தீர்மானம்.
</td>
<td>இது குறித்த வழக்கு நிலுவையில் உள்ளதால் வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கிறது</td>
</tr>
</table>